RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22248

OPEN ACCESS

# கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பல்லாங்குழி விளையாட்டு

ம. ஆத்மலிங்கம் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, எம்.ஜி.ஆர். கல்லூரி, ஓசூர்-635130, இந்தியா.

# Pallanguzhi game in Krishnagiri area

M. Aathmalingam [a, *]

[a], Research Department of Tamil, M.G.R College, Hosur-635130, India

* Corresponding Author: aathmalingam1977@gmail.com

Received: 10-02-2022
Revised: 03-04-2022
Accepted: 18-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

Man lived in groups in forests and mountains. He had to protect himself and his dependents. In this way, the protector was elevated to the status of leader by the Society. The leader of the group developed a martial art through his experience. That is why he taught Art to others in his free time, with the aim of benefiting his group as well as he benefited. It was turned into a pastime and practiced by young and old alike. This is art. Since it helps everyone's life, it has been followed through many generations and has stood and prevailed among the people. This art has evolved into a game. From children to adults, in today's scenario, they are interested in sports such as cricket and volleyball on television. Thus, the games that symbolize our culture are on the verge of extinction. In this context, this research paper examines the traditional pallanguzhi Game played by women in Krishnagiri area.

**Keywords:** Sports, Pitch, Playground, Pit, Soil, Body, Mud

## முன்னுரை

நாட்டுப்புற மக்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தும் இலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் இவ் நாட்டுப்புற விளையாட்டுகளில் பல்லாங்குழியும் ஒன்றாகும். கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பல்லாங்குழி விளையாட்டு குறித்து கட்டுரை பொருளாகக் கொண்டு ஆராயப்படுகின்றன.

## பல்லாங்குழி விளக்கம்

பல்லாங்குழி என்பது இரண்டு வரிசை குழிக்கு எதிரெதிரே இரண்டு மகளிர் அமர்ந்து கொண்டு விளையாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டு பொதுவாக பெண்களும் சிறுமியர்களும் விளையாடும் ஒரு விளையாட்டாகும்.

## சொற்பொருள் விளக்கம்

பல்லாங்குழி குறித்து பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.எடுத்துக்காட்டாக, "அடோன், தமிழ் ஆங்கில அகராதியில், காய்களைப் பல்லாங்குழியில் போட்டு மகளிர் விளையாடும் ஒரு வகை விளையாட்டாகும். (A game play/by woman by filling pits குழி-Pit house" என்று சொற்பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. (Adon, Tamil Dictionary, 2007)

## கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பல்லாங்குழி விளையாட்டு

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் மகளிர்களால் விளையாடப்படும் விளையாட்டுகளுள் குறிப்பிடத் தகுந்தவாகப் பல்லாங்குழி விளையாட்டு உள்ளது. இது, பெரும்பாலும் நடுத்தர வயதுடைய பெண்களால் விளையாடப்படுகின்றது. வேளாண் தொழில் செய்யும் பெண்களும், ஆடு, மாடு மேய்க்கும் பெண்களும் வீட்டில் குடும்ப பொறுப்புகளில் இருக்கும் பெண்களும், இந்த விளையாட்டை விளையாடுகின்றனர். முதற் பூப்படைந்த பெண்கள் தீட்டுக்குரிய காலத்திலும் கருவுற்ற பெண்கள் அமர்ந்து பொழுதுபோக்கு விளையாட்டாக விளையாடுகின்றனர்.

## விளையாட்டுக்களம்

சிற்றூர் பகுதியில் வீட்டின் கண் வாசலில் கெட்டியான மண்தரையில், குழிகளைத் தோண்டி விளையாடுவதற்கு ஏதுவாகவும் அமைத்துக் கொள்கின்றனர். ஆடு மாடுகளை மேய்ச்சல் தொழிலில் மேற்கொள்ளும் போது, காடுகளிலும், மலைகளிலும் கால்நடைகளை ஓட்டி, விட்டு விட்டு பூமியில் உறுதியான இடத்தில் ஒற்றையடி பாதையில் சமமாக இருக்கும் இடத்தை தேர்ந்தெடுத்துக்குச்சியினையோ, கம்பையோ அல்லது கூர்மையான கல்லையோ வைத்துக் குழியைப் பறிப்பர்.நகர்ப்புற மக்கள் பல்லாங்குழி விளையாட்டை விளையாடும்போது மரப்பலகையில் பல்லாங்குழி கருவியை தயார் செய்து வீட்டில் வைத்து விளையாடுகின்றனர்.

## பல்லாங்குழிக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள்

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் முத்துக்கொட்டை,கற்கள், புளியங்கொட்டை, வேப்பங்காய், முருங்கை விதை, புங்கங்கொட்டை, காரைக்காய் ஆகிய பொருட்களை காலப்பருவநிலைக்கு ஏற்ப, பல்லாங்குழி விளையாட்டில் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் சிறு கற்களை விளையாட்டுக்கு பயன்படுத்துகின்றனர். தமிழகத்தின் பிற பகுதிகளில் பல்லாங்குழி விளையாட்டில் "புளியங்கொட்டை, முருங்கைக் கொட்டை, குன்றிமணி, கோழிக்காய் முத்து, மொச்சை விதை, களிப்பாக்கு, வேப்பங்காய் ஆகிய பயன்படுத்தப்படுகின்றன". (M.Priyadharshini, 2009)

## பல்லாங்குழி எண்ணிக்கை

மகளிர் பல்லாங்குழி விளையாட்டை விளையாடும்போது 7+7=14 குழிகளைப் பயன்படுத்துகின்றனர். வட்டாரத்தில் ஒரு சில இடங்களில் 5+5=10, குழிகளைப் பயன்படுத்தி விளையாடுகின்றன. எனவே, பல்லாங்குழிகள் வடிவமைத்து இருந்தாலும், பல்லாங்குழிக்கு ஐந்து கற்களை மட்டும் பயன்படுத்துகின்றனர். 14 குழியாக இருந்தால் 70 கற்களையும், அதேப்போல் 10 குழியாக இருந்தால் 50 கற்களையும் குழிக் கல்லாகப் பயன்படுத்துகின்றனர்.

## பல்லாங்குழிக்குச் சிறப்பு பெயர்கள்

இவ்வட்டாரத்தில் பல்லாங்குழி என்பது சற்று வேறுபட்டு, தாய்க்குழி, பிள்ளைக்குழி, குழிக்கல், பொய்க் குழி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன.பல்லாங்குழி விளையாட்டு, வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் பனை என்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் பாண்டி என்றும், குமரி மாவட்டத்தில் பாண்டி, பலகை என்றும்,திருச்சி மாவட்டத்தில் பல்லாங்குழி பலகை என்றும், பொதுவாகத் தமிழகத்தின் தென்பகுதியில் பாண்டி,அரசு, வாய்க்குழி பொய்க்குழி, நடுக்குழி, காய்க்குழி, காவிக் குழி இராசுக்குழி என்று வழங்கப்பட்டு வருகின்றன." (M.Priyadharshini, 2009)

## தாய்க்குழி

இவ் விளையாட்டை விளையாடும்போது பிள்ளைக் குழியில் இருக்கும் கற்களை எல்லாம் எடுத்துத் தாய்க்குழியில் போடுவதால் தாய்க்குழி என்றும், கல் குழி என்றும், பிள்ளையை பாதுகாக்கும் குழி என்றும், என்றும் பெயர் பெற்றது. கற்களை சேர்த்து வைப்பதற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு தாய்க்குழியை அமைத்துக் கொண்டு விளையாடுகின்றனர். அனைத்து கற்களையும் சேகரித்து வைப்பதற்கு ஏற்றவாறு சற்றுப் பெரிய குழியாக இருக்கும்.

## பல்லாங்குழி சொற்கள்

இவ் வட்டாரத்தில் தோக்கு குழி, நக்கு குழி, தோக்கு தோக்கு, தாய்க்குழி, பசு கன்று போட்டுக்கிச்சு ஆடு குட்டி போட்டுக்கிச்சு, மண்மூடி குழி, பொய்க்குழிமூக்கு குத்து குழி, காது குத்துக்குழி சரி கல்யாணம் சரி கல்யாணம் சம்பந்தம்" என்றெல்லாம் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். (Interview, Selvam, 2014)

விளையாடுபவர் தன் பக்கம் இருக்கும் குழிகளில் ஐந்தைந்து கற்களை போட்டு நிரப்புகின்றார். பின்பு விளையாட்டைத் தொடங்கும் போது இருவருள் ஒருவர் சில்லறை காசு (அல்லது) மண்சட்டி ஓட்டுத் துண்டை எடுத்துக்கொண்டு எச்சில் தொட்டு மேலே தூக்கிப்போடும்போது எச்சா? ஓடா என்று ராஜா? பொட்டியா? என்று கேட்க, சொல்பவர் சரியாக சொல்லி விட்டால் அவரே விளையாட்டைத் தொடங்குவார்.டாஸில்(Toss) வெற்றி பெற்றவரே முதலில் விளையாட வேண்டும் என்பது விளையாட்டு நெறிமுறையாகும்." (Interview, Valarmathi, 2015)

முதலில் விளையாடுபவர் பக்கம் உள்ள குழிகளில் ஏதாவது ஒரு குழியிலிருந்து கற்களைக் கையில் வாரிக் கொள்கின்றனர். அக்கற்களை எடுத்து குழிக்கு, அடுத்த குழியில் இருந்து ஒவ்வொரு குழிக்கும் ஒரு கல்வியிலும் வலது பக்கமாக போட்டுக் கொண்டே வருகிறார்.அவ்வாறு வரும் பொழுது கையில் உள்ள கற்கள் முழுவதும் முடிந்து விடுகிறது. மீண்டும் அடுத்த குழிக் கற்களை எடுத்து,ஒவ்வொரு குழிக்கும் ஒரு கல் வீதம் போட்டுக் கொண்டே வரும் பொழுது எதிரணியின் பக்கம் குழிக்கற்களையும் வாரி ஒவ்வொன்றாக ஒரு கல் வீதம் போட்டுக் கொண்டே வருகிறார்.

## தோக்குழி நக்குகுழி

இதேபோல் தொடர்ந்து கற்களைப் போட்டுக் கொண்டே வருபவர், கையில் இருந்த கற்கள் முடிந்ததும், அடுத்தக்குழி காலிக் இருந்தால், அக்குழியில் கையைத் துடைத்து விட்டோ, தோக்கி அல்லது நக்கி விட்டோ காலிக் குழிக்கு அடுத்தக் குழியில் உள்ள கற்களை வாரிக் கொள்ளும் முறைக்கு ' தோக்குழி' என்றும்' நக்குக் குழி' என்றும்' காலிகக் குழி என்றும் தடவும் குழி' என்றும் இவ்வட்டாரத்தில் வழங்கப்படுகிறது. அடுத்து விளையாடுபவர் அவருடைய பகுதியில் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு குழியிலிருந்து கற்கள் எடுக்கிறார். கையில் எடுத்த கற்களை இடது பக்கமாக எதிர்மறை பகுதியிலிருந்து எதிர் அணியினர் குழியின் வழியாக ஒவ்வொரு குழிக்கு ஒரு கல் வீதம் போட்டுக் கொண்டே வருகிறார். இவரும் முதலில்விளையாடுபவர் போலவே, காலிக் குழியை துடைத்துவிட்டு அடுத்த குழிக் கற்களை எடுத்துக் கொள்கிறார். இந்நிகழ்வுக்குத் தென் மாவட்ட மக்கள் தடவி எடுத்தல், பாண்டி, தடவும் பாண்டி கல் என்றும் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். இவ் வட்டாரப் பகுதியில்"ஒருவர் நக்கியோ,தோக்கியோ கற்களை எடுத்த பின்னர், அடுத்து எதிர் வரிசையில் உள்ளவர் விளையாடுகின்றார். வாரு இந்த விளையாட்டை மாறி மாறி விளையாடுபவர்" (Interview, Macha Gandhi, 2018) என்று கள ஆய்வில் அறியமுடிகிறது.

## தோக்கு தோக்கு

விளையாடுபவர் தன் குழியில் உள்ள கற்களை எடுத்து ஒவ்வொரு குழியிலும் கற்களை பிரித்துப் போட்டுக் கொண்டே வருவர். அப்போது அடுத்து இருக்கும் இரண்டுக்கும் மேற்பட்ட குழியில்

கற்களை இல்லாது வெறுங்குழியாக இருந்தால்,அக்குழிகளைக் கையில் தோக்கு தோக்கு எனச் சொல்லி,அக்குழியில் கையை தடவி எடுத்துக் கொள்வார்.பின்பு எதிரணியினர் விளையாடத் தொடங்குவர். இது இவ்வட்டாரத்தில் பல்லாங்குழி விளையாட்டு வகையில் 'தோக்கு தோக்கு' என்று சொல்லி விளையாடுகின்றார். இம்முறையில் கற்களை வாரிக் கொள்ள முடியாது அதேபோல் இது தடவி தடவுதல் என்றும், இவ் வட்டார வழக்கத்தில் உள்ள குறிப்பிடத்தக்கதாகும். பசு கன்று போட்டுக்கிச்சு ஆடு குட்டி போட்டுக்கிச்சு இருவரும் குழியில் கற்களைப் பிரித்து போட்டு விளையாடும் பொழுது யார் பக்கம் உள்ள குழியில் நான்கு கற்கள் இருக்கிறதோ? அக்குழிக்கு சொந்தக்காரர் நான்கு கற்களையும் எடுத்துக் கொள்வார். அவ்வாறு குழியில் நான்கு கற்கள் இருந்தால் அக்குழிக் கற்களை 'பசு கன்று போட்டுக்கிச்சு' என்றும் 'ஆடு குட்டி போட்டுக்கிச்சு' என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். "பசு என்பது நான்கு கற்களை எடுப்பதற்காக விளையாட்டில் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.பசுவிற்கு பதிலாகக் கன்று என்றும், ஆட்டிற்கு, பதில் குட்டி என்றும் சொல்லி, இந்த விளையாட்டில் விளையாடப்படுவதை இவ் வட்டாரத்தில் காண முடிகிறது." (Interview, Kaviya, 2019)

பல்லாங்குழி விளையாட்டில் அதிகமான காய்களை வென்று அள்ளியவர் "பசு கன்று போட்டுக்கிச்சி" என்பர். அதற்குக் காரணம் பசுவை செல்வங்கள் என்றும் கடவுள் என்றும் வணங்கி வருவதை ஆகும். இது குறித்து இலக்கிய சான்றுகள் தெரிவிக்கின்றனர். பல்லாங்குழி விளையாடும் முல்லை நில மக்கள் மாடுகளையும் ஆடுகளையும் மேய்த்துக் கொண்டே விளையாடுவதனால்" பசு கன்று போட்டுக்கிச்சு" என்ற சொல்லாடலை இவை விளையாட்டில் பயன்படுத்துகின்றனர். தமிழர் பசுவை செல்வமாக கருதுகின்றனர் அதனால் பசுவை சேர்த்து வைக்கும் பழக்கம் இருக்க வேண்டும் என்பதையும் விளையாட்டு உணர்த்துகிறது மனிதன் ஒவ்வொருவரும் தன் வாழ்க்கை பாடத்தை கற்றுக் கொள்வதற்கு விளையாட்டு உகந்த ஆகிறது. இவ் விளையாட்டு தமிழரின் பாரம்பரிய விளையாட்டாகவும் இன்றியமையதாகவும் உள்ளது. செல்வத்தை சேர்த்தால், அதனை பிறருக்கு கொடுத்து உதவுதல் என்று அறம் சார்ந்த தமிழரின் வாழ்வியலை பிரதிபலிப்பதாக உள்ளது.

## மண் மூடிய குழி அல்லது மணல் மூடிய குழி

முதல் சுற்றில் யார் அதிகமான கற்களை பெற்றிருக்கிறார்களோ அவரே வெற்றி பெற்றவராக கருதப்படுகிறார். ஒவ்வொருவரும் மீண்டும் ஐந்தைந்து கற்களைக் கொண்டு குழியை நிரப்புகின்றனர்.இதில் வெற்றி பெற்றவரிடம் கற்கள் மிகுதியாகவும், தோல்வி அடைந்தவருடைய குழிக்கு கற்கள் இல்லாதது,ஒரு குழி காலியாக இருந்தபோது, முதல் சுற்றில் வெற்றி பெற்றவர் தன்னுடைய குழிகளில் ஒன்றை, மண்ணையோ அல்லது மணலையோ கொண்டு தற்காலிகமாக மூடி விடுகின்றார். இக்குழியை' மணல் மூடிய குழி' 'மண் மூடிய குழி' 'பொய்க் குழி' 'பீய்க்குழி' என்றும் 'காலிக் குழி' வெறுங் குழி' என்றெல்லாம் இவ்வட்டாரத்தில் அழைக்கின்றனர்.

## மூக்கு குத்தும் குழி (அல்லது) காது குத்தும் குழி

இரண்டாவது சுற்றில், இருவரும் குழிக்கு ஐந்தைந்து கற்களை போட்டுக் கொண்டே வரும் பொழுது குழிக்குக் கற்கள் போதாத பொழுது (ஐந்துகற்கள் குறைவாக இருந்து) ஐந்து கற்களை சமம் செய்வதற்காக, முதல் இரண்டு, மூன்று, நான்கு கற்களைக் இட்டு இருந்தால்,அடையாளப்படுத்துவதற்கு அக்குழியில் குச்சி, துரும்பு ,புல், இலை, தழை ,தென்னை புட்டு, சுண்ணாம்பு, சட்டி ஓடு இவற்றுள் ஏதேனும் ஒன்றை பயன்படுத்துகின்றனர். இதற்கு காதுகுத்து குழி மூக்கு குத்து குழி என்று அழைக்கின்றனர்.

## தோல்வியுற்றோருக்குப் பட்டப்பெயர்

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பல்லாங்குழி விளையாட்டில் தோல்வியடைந்தவரை சப்பை, மொட்டைஈ சோபானை, தொல்லி, தோத்தான், தொரசி, பீத்தா, பீத்தையன், தோத்தாங்கோழி,

தோலுருக்கி, தொளிச்சாள், பொட்டை, பொடச்சி, பொட்டையள், கூழ் குடிச்சவள் என்றெல்லாம் பட்டப்பெயர் சூட்டி இழிவுபடுத்துகின்றனர். அவ்வாறு பட்டப்பெயர்கள் சூட்டப்படுவதால் வெற்றி பெற்றவரின் மூலம் தற்போது தோற்றவருக்கு மறுபடியும் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி, விளையாட்டுச் சுறுசுறுப்படையும்.

## உடல் நலம்

உடலும், மனமும் ஒருசேர ஆரோக்கியமாகத் திகழவேண்டுமென்றால், உணவும், பணமும் மட்டும் இருந்தால் போதாது. நல்ல உடற் பயிற்சியும் அத்தியாவசியமானதொன்றாகும். இதை மனத்திற்கொண்டு செயல்பட்டால்தான் எதிர்கால இந்தியாவும் நோயற்று ஆரோக்கியமாக விளங்கும். கைகளையும் கால்களையும் அசைத்து அன்றாடம் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தால் அலுப்புத்தட்டிவிடும் என்பதற்காகவே, விளையாட்டு எனும் வடிவில் நமது முன்னோர்கள் பலவழிமுறைகளை நமக்குச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளனர்" என்று ஜேவியெஸ்ஸின் கருத்துக் குறிப்பிடத்தக்கதாகும். (Javious, 2000)

வாழ்க்கையில் சில நேரங்களில் பெண்கள் தோல்வியடைந்து விடுகிறார்கள். அப்போது மன நிலையில் தளர்வு ஏற்படக்கூடும். ஒவ்வொரு குழியிலும் ஒரு கல்லைப் போட்டு அடுத்தக் குழியில் ஒட்டுமொத்தமாகக் கற்களை வாருவதுபோல், ஒட்டு மொத்த பலத்தையும் சேர்க்கும்போது, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கான வழிமுறைகளைப் பல்லாங்குழி விளையாட்டுக் கற்றுக் கொடுக்கிறது.

குடும்பத்தில், பொருள் இருக்கும்போது இல்லாதபோதும் ஒரே மாதிரியாக வழிநடத்துபவள் பெண். 'சிறுதுளி பெரு வெள்ளம்போல் சிறுக சிறுக சேமித்து வைத்து, பொருளில்லாத போதும் வருத்தமில்லாமல் குடும்பம் நடத்தவேண்டும் என்பதையும் இந்த விளையாட்டு உணர்த்துகிறது.

குடும்பத்தை தலைமையேற்று வழி நடத்துபவள்பெண். குடும்பத்திற்கு ஏற்ற வருமானத்தைக் கொண்டு சிக்கனமாகச் செலவு செய்வதும், சமாளிப்பதுமாகிய பொருப்பேற்குத் தலைமை பெண்ணுக்கு உண்டு என்பதைப் பல்லாங்குழி விளையாட்டுப் பெண் சமூகத்திற்கு உணர்த்துகிறது.

இவ்விளையாட்டில் ஒருவருடைய வெற்றி தோல்வி என்பது அவருடைய திறமைகளைப் பொருத்தே அமையும், விளையாடப் பயன்படுத்தப்படும் காய்களைச் செல்வமாக நினைத்துத் தன்வசப்படுத்துவதுண்டு.

## முடிவுரை

கிருஷ்ணகிரி வட்டார மகளிர் விளையாட்டு வகைமையில் பல்லாங்குழி முக்கியமானதாகும். பல்லாங்குழி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. பல்வேறு காலக் கட்டத்தில் தமிழர்கள் இந்த விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். தமிழ்ச் சமூகம் எதனையும் காரண காரியத்தோடு தொடர்புப்படுத்தி செயல்களைச் செய்யும். அவ்வகையில், இவ்விளையாட்டுப் பொழுது போக்கிற்காக மட்டும் அமையாமல் ஆரோக்கியத்தையும், புத்திக் கூர்மையையும் வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டிருப்பதாகக் கருத முடிகிறது. இவ்வட்டாரத்தில் சமூக உறவு முறைகளைச் சிறப்பிக்கும் வகையில் பல்லாங்குழி விளையாட்டு அமைந்துள்ளது. தாய்க்குழி, பிள்ளைக்குழி என்று பல்லாங்குழியை வேறு பெயர்களிலும் கூறப்படுகிறது. கால் நடைகளைப் போற்றிய சமூகம் பல்லாங்குழி விளையாட்டில் 'பசு கன்று போட்டுக்கிச்சு ஆடு குட்டி போட்டுக்கிச்சு' என்று உருவகப்படுத்தி காய்களைக் கூறப்படுகின்றன.

## References

Adon, Tamil – English Dictionary, Thiruvananthapuram, India.

M. Priyadarshini (2009), Masterful Games, Chennai, India.

M. Priyadarshini (2009), Masterful Games, Chennai, India.

Javius, (2000), Tamil Nadu Sports and National Sports, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License